**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 023896 /எச்.1/2021** **நாள் : 23.03.2022**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மே–2022, மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு – பெயர்ப்பட்டியலில் விடுபட்ட மாணவர்களின் விவரங்களை – முதன்மைக் கல்வி அலுவலர் வாயிலாக அனுப்பி வைக்கக் கோருதல் – சார்பு.

**பார்வை :** அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள்:08.12.2021, 17.12.2021 மற்றும் 14.03.2022.

*****

மே 2022, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான மாணவர்களின் **பெயர்ப்பட்டியலில் மாணவர்கள் பெயர் ஏதேனும் விடுபட்டிருப்பின்,** அம்மாணவர்களின் விவரங்களை **பெயர்ப்பட்டியலில் சேர்த்திட (Addition)** ஏதுவாக, விடுபட்ட மாணவர்களின் விவரங்களை பள்ளிகளிலிருந்து பெற்று, முதன்மைக் கல்வி அலுவலரின் பரிந்துரையுடன் இவ்வலுவலகத்திற்கு 28.03.2022–க்குள் திருமதி.கு.ஜெயஸ்ரீ, துணை இயக்குநர் (மேல்நிலை), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 என்ற முகவரிக்கு விரைவஞ்சல் (Speed Post) மூலமும், dgeh4sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்க வேண்டும். இது குறித்து, அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதன்பிறகு எக்காரணத்தைக் கொண்டும் கூடுதலாக பெயரை பெயர்ப்பட்டியலில் சேர்க்க இயலாதெனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**ஒம்./–**
**இயக்குநர்**

<u>நகல்:</u>

1. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள்.